Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

Official Property Record

hello@verified.realestate
+91 9996 12 9996

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்பு துறை

அனுப்புநர் :-
திரு. ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப.,
நகர் ஊரமைப்பு இயக்குநர்,
807, அண்ணா சாலை,
சென்னை - 600 002.
www.tn.gov.in/dtcp
email ID : dtcp@vsnl.net

பெறுநர் :-
ஆணையர்,
மறைமலை நகர் நகராட்சி,
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

ந.க.எண்.11479/2015/எல்எ1, நாள்:13.07.2015.

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை- 2, செங்கல்பட்டு மண்டலம் - காஞ்சிபுரம் மாவட்டம் - செங்கல்பட்டு வட்டம்- மறைமலை நகர் நகராட்சி மற்றும் செங்குன்றம் கிராமம் - சர்வே எண்கள்: 198/2,3,4A,4B1,4B2,200,201/1A1,1A2,1A3, 1A6,1A7, 1A8,1A9,1A11,1A12,1B,2,202/1,203/1,2,3 மற்றும் 203/4-ல் அமையும் 9.52 ஏக்கர் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து - விவரம் கோருதல் - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர், திரு.N.சீனிவாசன் மற்றும் நான்கு நபர்கள், M/s.விஸ்டம் ஹவுசிங் பிராப்பர்ட்டீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, நாள்:06.04.2015.
2. ஆணையர்/ மறைமலைநகர் நகராட்சி, கடிதம் ந.க.எண். 1167/2015/அ1, நாள்:30.04.2015.
3. மண்டல துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு மண்டலம் கடிதம், ந.க.எண்.1634/2015/செம3, நாள்:10.06.2015.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.24282/2005 எல்எ2, நாள்.4.5.2006
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/12/எல்எ2 நாள்.19.4.12.

- - - - -

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு மற்றும் பூங்கா அமைப்பு (Road Pattern) வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ள சாலைகளை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 175 மற்றும் 179-ஆம் பிரிவுகளின்படி 300(8) பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு ஏற்ப சரளை கற்களை (Metaling) கொண்டு தார்சாலை அமைத்து ஆணையர் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்படல் வேண்டும். அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அலுவலரின் கருத்திற்கொப்ப மனுதாரார் அமைத்து தர வேண்டும்

பார்வை 4-ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள், மூலை முடக்கு பகுதி, பூங்கா, ஆகியவற்றின் நிலங்களை உள்ளாட்சிக்கு தானமாக வழங்கும்போது தானபத்திரத்தில் ஒவ்வொரு சாலைக்கும் எண்ணிட்டும் சாலையின் நீளம் மற்றும் அகலம் அளவுகள் மற்றும் பரப்பளவு குறிப்பிட்டும், நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்படல் வேண்டும். இது போன்று பூங்கா, நீள அகல அளவுகள் பரப்பளவு குறிப்பிட்டும் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்பட்டும் வரைபடத்தில் எண்ணிட்டும், ஆணையர் கையொப்பமிட்ட வரைபடத்தின் நகலையும் பத்திர பதிவு அலுவலகத்தில் சேர்த்து பதிவு செய்தல் வேண்டும்.

பார்வை 5-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகள் அனைத்தும் தார் சாலைகளாக அமைத்து அதனை நிழற்படம்(Photo) எடுத்து இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி மனைப்பிரிவு சாலைகள் எல்லை வரை (Upto the end of boundary) தார் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதற்கு உறுதிமொழியினை மனுதாரரிடம் பெற்றுக் கொண்டு அதனை உறுதி செய்து ஊராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றி தீர்மான எண்ணுடன் தான பத்திரத்தில் ஆணையர் கையொப்பமிட்டு பத்திரம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு தான பத்திரம் பதிவு செய்யப்பட்டதை உறுதி செய்து அத்தாட்சியிட்ட தான பத்திர நகல், மன்ற தீர்மானம் வில்லங்க சான்று மற்றும் (Photo) நிழற்படம் ஆகியவற்றினை ஆணையர் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு

சாலை அமைப்பு வரைபடம்-1

(ஒம்)/-ஆர்.கிர்லோஷ் குமார்,
நகர் ஊரமைப்பு இயக்குநருக்காக

நகல்:

1. மண்டல துணை இயக்குநர் (பொ) — வரைபடம்-1
   செங்கல்பட்டு மண்டலம்,
   செங்கல்பட்டு.
2. மனுதாரர், திரு.N.சீனிவாசன் மற்றும் நான்கு நபர்கள், — வரைபடம்-1
   M/s.விஸ்டம் ஹவுசிங் & பிராப்பர்ட்டீஸ் பிரைவேட் லிமிடெட்,
   எண்.1, 5வது குறுக்கு தெரு,
   குரோம்பேட்டை, சென்னை-600 044.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

17/7/15

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்.

17.07.15

அ.மு.14.07.2015.

மறைமலைநகர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு. ப.மு.நெ. முஜஷிபுர் ரஹ்மான். பி.எஸ்.சி.,

ந.க.எண். 1167/ 2015 /அ1 **நாள். 15.10.2018**
ம.அ. எண். 01/2018–19

பொருள்: மனைப்பிரிவு– காஞ்சிபுரம் மாவட்டம் - செங்கல்பட்டு வட்டம் – – மறைமலைநகர் நகராட்சி – செங்குன்றம் கிராமம் அளவை எண்கள். 198/2,3,4எ மற்றும் பலவற்றில் **9.52** ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்த ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1. திரு. எஸ்.மோகன், விஸ்டம் ஹவுசிங் அண்டு ப்ராப்பர்டீஸ் பி லிட், சென்னை, என்பவரின் விண்ணப்ப நாள்.06.04.2015.
2. இவ்வலுவலக கடித ந.க.எண். 1167/2015/அ1 நாள். 30.04.2015.
3. நகர்மன்ற தீர்மான எண். 141 நாள். 31.07.2017.
4. தானப்பத்திர எண்.9584/ 2017 நாள்.27.09.2017.
5. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ) , அவர்களின் கடித ந.க.எண். 1061/2017/செம3 நாள். 23.07.2018.
6. இதர ஆவணங்கள்.

*****

உத்திரவு

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட செங்குன்றம் கிராமம் அளவை எண்கள். 198/2,3,4A மற்றும் பலவற்றில் **9.52** ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்த பார்வை – 1ல் காணும் விண்ணப்பத்தினை பார்வை – 2ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டதன் பேரில், பார்வை – 3 ல் கண்ட தீர்மானத்தின்படி, பொது திறவிடங்களை பார்வை 4ல் காணும் தானபத்திரத்தின் மூலம் **(தான பத்திர எண்.9584/2017 நாள்.27.09.2017)** நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே பார்வை 5ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு, அவர்களின் கடித ந.க. எண். 1061/2017/செம3 நாள்.23.07.2018 ன்படி, இம்மனைப் பிரிவு வரைபடத்திற்கு **மவ/நஊதுஇ(செம). எண். 21/2018** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டது . உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே,இவ்வுத்தரவு கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், மறைமலைநகர்

நகராட்சிக்குட்பட்ட செங்குன்றம் கிராமம் அளவை எண்கள். 198/2,3,4A மற்றும் பலவற்றில் 9.52 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்த அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

ஆணையர்
மறைமலைநகர் நகராட்சி

இணைப்பு: நிபந்தனை – 1
மனைப்பிரிவு வரைபடம் – 1

பெறுநர்.

திரு எஸ்.மோகன்
விஸ்டம் ஹவுசிங் அண்டு ப்ராப்பர்டீஸ் பி லிட்
நெ. 1, 5வது குறுக்கு தெரு
குரோம்பேட்டை, சென்னை– 600044.

நகல்:

1) நகர் ஊரமைப்பு துணை இயக்கனர், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு அவர்களுக்குதகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2) சார் பதிவாளர், பத்திரபதிவு அலுவலகம் செங்கல்பட்டு அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate